திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த உடைகள் வருஷத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறதா அல்லது இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறதா ? கொடுக்கும் இந்த உடை ஆறு மாதத்திற்குக் கூட வரவில்லே. ஆகவே, உழைக்கும் அவர்களுக்கு உடைகள் கொடுப்பதை உயர்த்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை அல்ல ; ஆண்டுக்கு ஒருமுறை, அநேகமாக தீபாவளியின்போது கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அவர்களுடைய தேவையை முன்னிட்டு, 1968–69-க்கான உடைகளை செப்டம்பர் திங்களிலிருந்து, அவர்களுடைய அவசரத்தை முன்னிட்டு வழங்கப் போகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த காக்கி உடைக்குப் பதிலாக ரெயில்வே கார்டுகள் போல் வெள்ளை உடை கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அது அழுக்காகிவிடும்.

Extra flights within State

*** 197 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government has been consulted by the Indian Airlines Corporation for operating extra flights within this State—**

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் வருவதால் தொழிலுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதை ஒட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் கயிற்றுறில் விமான நிலையம் நிறுவ மத்திய அரசாங்கத்திற்கு, நம்முடைய அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : சாதாரணமாக மாநிலங்களில் உள்ள விமான நிலையங்கள் பற்றி மாநில அரசைக் கலந்து ஆலோசனை செய்வது இல்லை. ஆனுலும், அதற்கென்று குழுக்கள், அட்வைசரி கமிட்டிகள் இருக்கின்றன. அந்தக் கமிட்டிகள் மூலமாக நம் தேவைகளைச் சொல்ல முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சேலம் நகரத்தில் ஒரு விமான நிலையம் நிறுவ வேண்டும் என்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வந்ததா ? அதன்மேல் அரசாங்கம் ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அந்தக் கோரிக்கை பற்றி மத்திய சர்க்கார் சேலத்தில் தொழிற்சாலை அமைக்கப்பட்ட பிறகு அது அவசியமாக இருக்கும் என்று அதை இப்போதைக்கு ஒத்தி வைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத் தலைநகரம் பற்றியும் ஒவ்வொரு உறுப்பினர் கேட்பதற்குப் பதிலாக, எல்லா நகரங்களைப் பற்றியும் ஒருவர் கேட்டால், அமைச்சர் பதில் அளிக்க வசதியாக இருக்கும்.

Dr. H. V. HANDE : Have this Government suggested or recommended to the Central Government or Indian Airlines Corporation, to have more aerodromes in our State as at present we have aerodromes only in Madras, Madurai, Coimbatore and Trichy ? In view of the fact that in recent times flights from Trivandrum to Madras have been cancelled and people want to

1968 ஆகஸ்ட் 30]

go quickly and they are put to lot of difficulties due to reduction of flights, will the Hon. Minister convey the feelings of the House to the Centre to have more aerodromes and flights in this State ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த அதிகாரங்கள் நம்மிடத்தில் இல்லை. அவற்றைக் கவனிக்க கமர்ஷியல் மானேஜர் என்று இந்த விமானப் போக்குவரத்தைக் கவனிக்கிறார். நம் தேவைகளைப் பற்றிச் சொல்ல, இந்தியன் ஏர்லைன்ஸ் அட்வைசரி கமிட்டி யென்றும், ஏர்-இந்தியா அட்வைசரி கமிட்டி என்றும் இருக்கிறது. அதிலே தமிழக அரசு உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக, மாநில அரசு சிபாரிசு தான் செய்யக்கூடிய சூழ் நிலை இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து சென்னைக்கு வர பகலில் 11 மணிக்குத்தான் விமான சர்வீஸ் இருக்கிறது. ஆகவே, தொழில் அதிபர்கள், மற்றவர்கள் சென்னைக்கு வந்து காரியங்களைப் பார்க்க இடையூறு இருக்கிறது. ஆகவே, காலை 7 மணி, 8 மணி அளவில் கோவையில் புறப்பட்டு, மாலை 6 மணிக்குத் திரும்பப் போகும் அளவில் சர்வீஸ் விடுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விமானப் போக்குவரத்தைப் பற்றி குறைகள், இடையூறுகள், இருப்பதை தனியாக எழுதி அனுப்பப்பட்டால் மத்திய சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர மாநில சர்க்கார் தயங்காது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, விமானப் பயணத்தில் மக்களுக்கு அதிகமான ஆவல் ஏற்பட்டிருப்பதால், சென்னையைச் சுற்றிவர விமானங்களை ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்தைக் கவனிக்க இரண்டு ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தின் சார்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் யார் யார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மொத்தம் இரண்டு குழுக்கள் இருக்கின்றன. ஐ.ஏ.ஸி.-யில் 17 பேர்களும், ஏர்-இண்டியா கமிட்டியில் 16 பேர்களும் இருக்கிறார்கள். மாநில அரசின் சார்பில் ஐ.ஏ.ஸி.யில் திரு. தர்மலிங்கம், எக்ஸ்-எம். பி. யும், ஏர்-இந்தியா அட்வைசரிக் கமிட்டியில் திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியன் என்பவரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

சென்னையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஒழிப்பு

***198 வின.—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் ஆட்டோ ரிக்ஷாவை ஒழிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம் : சார், ஆட்டோ-ரிக்ஷாக்கள் கட்டணம் குறைவாக இருக்கிறது என்றாலும் பிரயாணம் செய்வதில் சுகம் ஒன்றும் இல்லை. அதில் ஏறிப் பிரயாணம் செய்யும்போது, சத்தம் அதிகமாக இருக்கிறது.